**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

16.7.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 09.7.2011 முதல்15.7.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**09-7-2011 முதல் 15-7-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 23 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 6 |
| 5. | வகுப்பறை வன்முறை | 2 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 4 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 1 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | 3 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 3 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 4 |
| 17. | மணல் கொள்ளை | 4 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

தொகுப்பு – மக்கள் கண்காணிப்பகம், மதுரை

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 3 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 2 |
| 22. | பொதுவானவை | 5 |
| | மொத்தம் | 62 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-27
# 9.7.2011 முதல் 15.7.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1766. | 9.7.2011 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் அருகே அணைக்காரபட்டியைச் சேர்ந்த முகமதுஉசேன் மனைவி யாஸ்மின் பானு. யாஸ்மின் பானு மற்றும் அவரது உறவினர் அமிர்தராஜிக்கும் இடையே ஏற்பட்ட வாய் தகராறில் யாஸ்மின் பானுவை அமிர்தராஜ் தாக்கியதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1767. | 9.7.2011 | **மதுரை மாவட்டம்:** திருதங்கலம் அருகேயுள்ள டி.ரமநாதபுரத்தைச் சேர்ந்த செல்வம் மனைவி காளியம்மாள்(27). அதே பகுதியைச் சேர்ந்த உறவினர் பெருமாள்காளியம்மாளை கடத்திச் சென்றதாக செல்வம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 1768. | 9.7.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் கூடமலையில் ராஜேந்திரன் மகள் செல்வி(16) கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்த கிருஷ்ணன்(25) இருவருக்கும் நடக்க இருந்த திருமணத்தை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். | குழந்தைத் திருமணம் | தினகரன் |
| 1769. | 9.7.2011 | **நெல்லை மாவட்டம்:** கேரள மாநிலம் சோட்டாணிக்கரையைச் சேர்ந்த நந்தகுமார்(27). பிரபல ஜோதிடரான இவர் பரிகாரம் மற்றும் தோஷங்களை கழிப்பதாக கூறி நெல்லை லாட்ஜில் தங்கியிருந்தார் நந்தகுமாரை பார்க்க சென்ற லலிதா மற்றும் பானுமதி ஆகிய பெண்களிடம் நந்தகுமார் பாலியலுக்கு முயற்சி. கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1770. | 9.7.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி தாலுகா, கோட்டைப்பட்டியைச் சேர்ந்த மாணிக்கம்(35) தனது வீட்டில் அனுமதியின்றி பட்டாசு தயாரிக்கும் போது ஏற்பட்ட தீ விபத்தில் மாணிக்கம் மற்றும் குழந்தை மற்றும் மனைவி மூவருக்கும் தீக்காயம். | பட்டாசு ஆலை தீ விபத்து | தினகரன் |
| 1771. | 9.7.2011 | **கோவை மாவட்டம்:** பீளமேடு காளைப்பட்டியில் கே.எஸ்.மெர்ச்சண்டைஸ் நிறுவனத்தின் இயக்குனர் சசிரேகாவை சென்னை கே.கே நகரைச் சேர்ந்த தி.மு.க. கவுன்சிலர் தனசேகரன் கடத்தியதோடு ரூமில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்ததாக சசிரேகா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1772. | 9.7.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** சேத்துபட்டு அருகே மேலானூர் கிராமத்தில் வசித்து வரும் ஜெயபால்சிங்(50)க்கும் காஞ்சிபுரத்தில் வசித்துவரும் லட்சுமணன் மகள் ராதிகா(11) இருவருக்கும் திருமணம் நடந்ததாக புகார். | குழந்தைத் திருமணம் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1773. | 9.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** குஜிலிம்பாறை கரும்பாறைப்பட்டியைச் சேர்ந்த சத்யா(26). கணவர் செந்தில்குமார் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக்கேட்டுத் துன்புறுத்தியதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணை கொடுமை | தினமலர் |
| 1774. | 9.7.2011 | **கோவை மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே இளந்தைகுளம் கண்மாயில் அனுமதியின்றி மணல் அள்ளி வந்த முத்துக்குமார் வைரமுத்து இசக்கி ஆகியோர் 3 பேர் கைது. | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 1775. | 10.7.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியில் அரசு பேருந்தில் அதிகாரிகள் நடத்திய சோதனையில் 7 மூடைகளில் இருந்த 350 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 1776. | 10.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி அருகே உள்ள ஆண்டிபட்டி, கிழக்குத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த வேலுச்சாமி(65). தனது தம்பி மகளை அதே பகுதியைச் சேர்ந்த சிவக்குமார்(22) கேலி செய்ததை வேலுச்சாமி கண்டித்தார். ஆத்திரமடைந்த சிவக்குமார் வேலுச்சாமியை மதுபாட்டிலால்அடித்துக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1777. | 10.7.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் திருவள்ளுவர் தெருவைச் சேர்ந்த முருகேசன் என்ற முருகன்(30) மனைவி கற்பகவள்ளி. கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த முருகன் கற்பகவள்ளியை அரிவாளால் கழுத்தை அறுத்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தமிழ்சுடர் |
| 1778. | 11.7.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் ஜவகர் மைதான தெருவில் முத்துக்கணேஷ் என்பவரது வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 35 லிட்டர் ரேசன் மண்ணெண்ணெய் பறிமுதல். கணேஷ், மாதவன் இருவர் கைது. | ரேசன் மண்ணெண்ணெய் பறிமுதல் | தமிழ்சுடர் |
| 1779. | 11.7.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இரவு கரண்ட் போன நேரத்தில் பிரசவ வார்டில் இருந்த குழந்தையை கடத்த முயன்ற மர்ம நபர்களை பணியில் இருந்த நர்சுகள் விரட்டியதாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1780. | 11.7.2011 | **தேனி மாவட்டம்:** சின்னமனூர் அருகே காந்திநகர் காலனியைச் சேர்ந்த பரமேஷ்வரன் மனைவி விமலாராணி(20). கணவர் மற்றும் குடும்பத்தார்கள; கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த விமலாராணி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 1781. | 11.7.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே டி. அம்பலகாரன்பட்டியைச் சேர்ந்த ஆனந்தவியாசர் மகள் திவ்யா(19) அதே பகுதியைச் சேர்ந்த பாண்டி(31).இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். திவ்யாவின் தாய் மாமன் கொலை | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மிரட்டல். | | |
| 1782. | 11.7.2011 | **மதுரை மாவட்டம்:** மேலவளவு அருகே மரைக்காயார்பட்டணம் அருகே சாலையோரம் 65 வயது முதியவர் மர்மமான முறையில் இறந்து கிடந்ததாக பொதுமக்கள் புகார். | முதியவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1783. | 11.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** குட்டியப்பட்டி பிரிவில் தோல் தொழிற்சாலை நடத்திவருபவர் இப்ராகீம். இவரது தொழிற்சாலையில் கழிவுநீர் கிணறை சுத்தம் செய்யும் போது விஷவாயு தாக்கி தங்கமணி(45), ராஜ் (35) இருவர் மரணம். | விஷவாயு தாக்கி தொழிலாளி மரணம் | தினகரன் |
| 1784. | 11.7.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** லெம்பலக்குடி நகரத்துப்பட்டியைச் சேர்ந்த சின்னப்பா என்ற சிதம்பரம்(36). விசாரணைக்காக காவல்நிலையம் அழைத்துச் செல்லப்பட்ட சிதம்பரம் காவல்நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டு கொலை. | காவல் நிலையச் சித்திரவதை & காவல் நிலைய மரணம் | தினகரன் |
| 1785. | 11.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி கணேசபுரம் கருணாநிதி நகரைச் சேர்ந்த மனோகரன் மகள் ஜெகதீஸ்வரி(19). அதே பகுதியைச் சேர்ந்த கருப்பசாமி(38) தன்னை சாமியார் என கூறிக் கொண்டு திருமணம் தோஷம் நீக்குவதாக கூறி ஜெகதீஸ்வரியை கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 1786. | 12.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை பஜாரில் ஆறுமுகம் (53) மகள் லட்சுமி, மருமகன் திருநாவுக்கரசு இருவரும் ஆறுமுகத்திடம் இருந்த பணத்தை பறித்துக் கொண்டு வீட்டை விட்டு துரத்திவிட்டதாக ஆறுமுகம் புகார். | முதியோர்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1787. | 12.7.2011 | **மதுரை மாவட்டம்:** கூடல்புதூர் காவல்நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வாலிபர் காவல்நிலையத்தல் தற்கொலைக்கு முயற்சி. இச்சம்பவத்தில் இரவு பணியில் இல்லாத பெண் எஸ்ஐ–யை ஆண்டனி ஜெகதா இடமாற்றம். | காவல்நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1788. | 12.7.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை ஊரப்பாக்கம் அருகே கிளாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சுபாஷினி(24). உடன் படித்த மாணவரை காதலித்துத் திருமணம் செய்தார். திருமணம் முடிந்த 1 மணி நேரத்தில் பெற்றோர்களின் மிரட்டல் காரணமாக காதலன் பிரிந்து விட்டதாக சுபாஷினி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1789. | 12.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** கோவானூரைச் சேர்ந்த சந்திரன் மனைவி வள்ளி(42)க்கும் அருகில் வசிக்கும் அங்கம்மாளுக்கும்(60) இடப்பிரச்சனை. இருவருக்கும் நடந்த தகராறில் கல்லை எடுத்து எறிந்ததில் படுகாயமடைந்த வள்ளியம்மாள் மரணம். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1790. | 12.7.2011 | **மதுரை மாவட்டம்:** தென்பழஞ்சியைச் சேர்ந்த | பெண்கள் மீதான | தினமணி |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாகமலையான் அண்ணன் மகள் புலியம்மாள். புலியம்மாளை சிலர் கடத்திச் சென்றதாக நாகமலை காவல் நிலையத்தில் புகார். நாகலைப் புதுக்கோட்டை காவலர்கள் நடவடிக்கை எடுக்காததோடு தன் மீது பொய் வழக்கு போட்டுள்ளதாக சப் –இன்ஸ்பெக்டர் பாபு, ஜீவா, வேலம்மாள், பஞ்சம்மாள், சின்னக்காளை ஆகிய 5 பேர் மீது நீதிமன்றத்தில் மனு தாக்கல். | வன்முறை & காவல் நிலையச் சித்திரவை | |
| 1791. | 12.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் வத்தலக்குண்டு ரோட்டில் உள்ள விஎம்ஜ என்ற தனியார் தோல் தொழிற்சாலையில் கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்யும்போது தங்கமணி, ராஜு இருவரும் மரணம். | விஷவாயு– தாக்கி தொழிலாளி மரணம் | தீக்கதிர் |
| 1792. | 12.7.2011 | **தருமபுரி மாவட்டம்:** அரூரில் கர்நாடகத்தைச் சேர்ந்த திருமண கோஷ்டியினர் 30க்கும்மேற்பட்டோர் டெம்போ வேனில் சென்றுக்கொண்டிருந்தனர். அங்கு வாகன சோதனையில் ஈடுபட்ட காவல்நிலைய ஆய்வாளர் சுரேஷ்குமார் மற்றும் காவலர்கள் அவர்களை காவல்நிலையம் அழைத்துச் சென்று விசாரணை. என்ற பொயில் சித்திரவதை. .காவலர்களின் அடாவடித்தனத்தை கண்டித்து சாலை மறியல் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1793. | 12.7.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அருகே உள்ள பம்மல் நகராட்சியில் ஸ்ரீ சங்கர வித்யாலயா பிரைமரி, நர்சரி மெட்ரிக் பள்ளியில் 400 குழந்தைகள் உள்ளனர். வகுப்பறையில் பேசி விளையாடிக் கொண்டிருந்த 40 குழந்தைகளின் வாயில் ஆசிரியர் செலோடேப்பால் (பிளாஸ்திரி) ஒட்டியதால் குழந்தைகளுக்கு அலர்ஜியும் வாயில் வீக்கம் ஏற்பட்டதாகவும் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என பெற்றோர்புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 1794. | 13.7.2011 | **சென்னை மாவட்டம்:** கொருக்குப்பேட்டை கிழக்கு முத்தையா தெருவில் உள்ள வடசென்னை கூட்டுறவு பண்டகசாலை ரேசன் கடையினை அமைச்சர் புத்திரசந்திரன் ஆய்வு செய்தார். கொருக்குபேட்டை ரயில் நிலையத்தில் இருந்து வெளிமாநிலத்திற்கு கடத்த முயன்ற 6 மூட்டை (160 கிலோ) ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 1795. | 13.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை ஆராவயல் போலீஸ் சரகம் தானிக்ஷாஊரணி கிராமத்தைச் சேர்ந்த காசி(65) அதே பகுதியைச் சேர்ந்த சரவணன்(25) இருவருக்கும் வாய் தகராறு. அடிதடி வழக்கில் காசியை கைது செய்யாமல் இருக்க சப் இன்ஸ்பெக்டர் அர்ஜுனன் ரூபாய் 2 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக புகார். இன்ஸ்பெக்டர் கைது. | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 1796. | 13.7.2011 | **மதுரை மாவட்டம்:** ஆனையூர் அகதிகள் | பெண்கள் மீதான | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முகாமைச் சேர்ந்த அந்தோணிசாமியின் 19 வயது மகள். அதே முகாமில் வசிக்கும் சுரேஷ் கடத்திச் சென்றதோடு 2 லட்சம் கேட்டு மிரட்டியதாக புகார். | வன்முறை & கடத்தல் | |
| 1797. | 13.7.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் சாத்தனூரைச் சேர்ந்த மாதவி மகன் பாலமுருகன்(17). சிவகங்கை பழையனூரைச் சேர்ந்த காயாம்பு ஆடு மேய்க்கும் தொழிலுக்கு பாலமுருகனை கொத்தடிமையாக கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் & கொத்தடிமை | தினமலர் |
| 1798. | 13.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்துர் வட்டம், பாளையத்தில் அரசுக்கு சொந்தமான நிலத்தில் அனுமதியின்றி மணல் அள்ளிய இரண்டு ஜே.சி.பி இயந்திரங்கள் பறிமுதல். | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 1799. | 13.7.2011 | **மதுரை மாவட்டம்:** திண்டுக்கல்லையைச் சேர்ந்த மரியகவுண்டன்பட்டியைச் சேர்ந்த சின்னம்மாள்(65). புதுக்கோட்டையில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று திருச்சி பேருந்து நிலையத்திற்கு வந்த மூதாட்டியை ஏமாற்றி குளிர்பானத்தில் மயக்கமருந்து கொடுத்து 5 பவுன் நகையை திருடிச் சென்றதாக புகார். | முதியோர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1800. | 13.7.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் அர்ச்சகர் ஆகும் திட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்தது. திருவண்ணாமலை கோயிலில் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு தீண்டாமை கொடுமை கடைப்பிடிக்கப்படுவதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1801. | 13.7.2011 | **தேனி மாவட்டம்:** தேவாரம் அருகே உள்ள சாக்கலூத்து மலையடிவாரம் அடர்ந்த வனப்பகுதி வழியாக கேராளவுக்கு மணல் கடத்திய 24 கழுதைகளை காவலர்கள் பிடித்தனர். | மணல் கொள்ளை | தினகரன் |
| 1802. | 13.7.2011 | **தேனி மாவட்டம்:** தீட்டியபாறை வழியாக 7 கழுதைகளில் தலா 50 கிலோ மூடை ரேசன்அரிசியை கட்டி அனுப்பிவிட்டு பின்தொடர்ந்து வந்த அனுமந்தன்பட்டி பாண்டி(45) மகன் ஈஸ்வரன்(20) கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 1803. | 13.7.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் பாண்டியன் நகரைச் சேர்ந்த துரைசாமிக்குச் சொந்தமான தீப்பெட்டி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் பெண் தொழிலாளி அம்பிகா மரணம். 8 பேர் காயம். வேலூர் அரசு மருத்துவமனையில் அனுமதி. | தீப்பெட்டி ஆலையில் தீ விபத்து | தினகரன் |
| 1804. | 14.7.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே போலிபட்டியைச் சேர்ந்த ராஜாங்கம் மனைவி சுமதி(30). கணவர் மற்றும் அவரது பெற்றோர் கூடுதல் வரதட்சணைகேட்டு துன்புறுத்துவதாக | பெண்கள்மீதான வன்முறை & வரதட்சணைக் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுமதி புகார். | கொடுமை | |
| 1805. | 14.7.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே மாதரை பகுதியைச் சேர்ந்த தெய்வம் மனைவி ரூபினி(21). அதே பகுதியைச் சேர்ந்த பால்பாண்டி(21) ரூபினியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. ரூபினி புகார். பால்பாண்டி கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்மறை | தினகரன் |
| 1806. | 14.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி அருகே வயலூரைச் சேர்ந்த வேல்முருகன்(39) மனைவி வேல்வள்ளி(26). கடைக்குச் செல்வதாக சென்றவரை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1807. | 14.7.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை நிலக்கோட்டை கல்லடிப்பட்டியைச் சேர்ந்த குணசீலி மதுரை அருகே திருமால்புரம் அக்னியம் பள்ளியில் விடுதியில் தங்கி படித்த வந்தார். விடுதியில் இருந்து வெளியே சென்றவரை காணவில்லை என புகார். | பள்ளி மாணவி மாயம் | தமிழ்சுடர் |
| 1808. | 14.7.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி மலட்டாறில் இருந்து அனுமதியின்றி மணல் கடத்திய டிராக்டரை எம். கரிசல் குளம் ஆற்றுபாலம் அருகே கனிம வள துணைஇயக்குனர் சொக்கலிங்கம், துணை தாசில்தார் மாரி ஆகியோர் பறிமுதல் செய்தனர். அடையாம் தெரியாத மர்ம நபர்கள் 6 பேர் அதிகாரிகளை மறித்து கொலை செய்ய முயன்றதாக புகார். | மணல் கொள்ளை & கொலை முயற்சி | தினமலர் |
| 1809. | 14.7.2011 | **மதுரை மாவட்டம்:** பெத்தானியாபுரம் தாமரை விதியைச் சேர்ந்த சாமிநாதன் மருமகன் பிரடிரிக் சந்திரன் தொழில் வளர்ச்சி தொடர்பாக சேகர், மற்றும் கரணாநிதி பேரவை தலைவர் பணச்செல்வன் ஆகியோரிடம் ரூபாய் பத்துலட்சம் கடன் வாங்கினார். பிரடிரிக் சந்திரன் 50 லட்சம் கட்டிய பின்பும் கூடுதலாக கூடுதலாக 50 லட்சம் பணம் கேட்டு சேகர் மற்றும் பணச்செல்வன் சந்திரன் வீடு மற்றும் நிலத்தை அபகரிக்க முயன்றதாக புகார். | கந்துவட்டிக் கொடுமை | தினமலர் |
| 1810. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே பூநசரிபட்டியைச் சேர்ந்த பிச்சைமணி(20) விருதுநககர் கல்லூரியில் பி.ஏ. முதலாமாண்டு படித்து வந்தார். கல்லூரி சென்ற பிச்சைமணியைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1811. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டியைச் சேர்ந்த முருகன் மனைவி கலைச்செல்வி மகள் கோகிலாவாணி(19). தாய் தந்தை இருவரும் அடிக்கடி சண்டைபோடுவதால் மனமுடைந்த கோகிலாவாணி கிணற்றில் விழுந்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 1812. | 15.07.2011 | **நாமக்கல் மாவட்டம்:** ப.வேலூர் அருகே, மரவபாளையத்தைச் சேர்ந்த சரஸ்வதி(73). சரஸ்வதி மற்றும் அவரது சகோதரருக்கு | பெண்கள் மீதான வன்முறை & | தினமலர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சொந்தமான இடத்தை தி.மு.க., வைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ ராமசாமி போலி ஆவணங்கள் தயாரித்து அபகரித்து தங்களை ஏமாற்றியதாக சரஸ்வதி புகார். | நில அபகரிப்பு | |
| 1813. | 15.07.2011 | **திருச்சி மாவட்டம்:** திருவானைக்காவல், விக்னேஷ் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் ஹேமமாலினி(37). தங்களது 1 கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டிடத்தை திருச்சி. மலைக்கோட்டை பகுதி தி.மு.க செயலாலர் மதிவாணனிடம் விற்றார். பாதி பணத்தை கொடுத்த மதிவாணன் மீதி பணத்தை கொடுக்காமல் ஏமாற்றியதாக ஹேமமாலினி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1814. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** நரிமேட்டைச் சேர்ந்த கார்த்திகா(22). தனியார் பொறியியல் கல்லூரியில் பி.இ., படிக்க இயலவில்லை என்பதால் மனமுடைந்த கார்த்திகா ஆசிட்டை குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 1815. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே எட்டிமங்கலத்தைச் சேர்ந்த சிவகாமிக்கும் அதே பகுதியைச் சேர்ந்த சத்தியபாண்டிக்கும் நடந்த வாய்த் தகராறில் தட்டிக் கேட்ட சத்தியபாண்டியின் தங்கை தமிழ்செல்வியை சிவகாமி மற்றும் அவரது தம்பி செல்வம், பெரியவர் தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1816. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை நகர் கட்டுப்பாட்டு அறை ஏட்டு ஜேசுகல்யாணம். இரவு பணியின் போது கட்டுப்பாட்டு அறையில் போதையில் இருந்ததாக எஸ்ஐ ராமையா புகார். ஜேசுகல்யாணம் பணிநீக்கம். | குடிபோதையில் காவலர் | தினகரன் |
| 1817. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை தெற்குவெளி வீதியில் உள்ள ஈ.வே.ராமாநகராட்சி பெண்கள் பள்ளியில் 4 ஆயிரத்து 540 மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் மாணவிகளுக்கு போதுமான கழிப்பறை வசிதி இல்லாததால் மாணவிகளுக்கு நோய் பரவுவதாக பெற்றோர் புகார். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 1818. | 15.07.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் பாசி போரக்ஸ் என்ற நிதி நிறுவனத்தை கமலவள்ளி, மோகன்ராஜ், கதிரவன், நடத்தி வந்தனர். மேல்புகார். இவர்கள் மோசடியில் ஈடுபட்டதோடு உடந்தையாக இருந்த டிஎஸ்பி ராஜேந்திரன் கைது. | காவல் நிலையச் சித்திரவதை & மோசடி | தினகரன் |
| 1819. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே சாத்தமங்கலம் கிராமத்தில் உள்ள பொன்னாண்டியம்மன் கோவில் திருவிழாவில் கரகத்தை கரைக்க பொது ஊரணியில் தலித் மக்கள் இறங்க ஆதிக்கச் சாதியினர் தடை விதித்தாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1820. | 15.07.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் தாலுகா | தலித்துகள் மீதான | தீக்கதிர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கச்சிராயன்பட்டி அருகே உள்ள மணப்பட்டி இந்திராநகரைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் செல்வம்(19). கல்லூரியில் படிக்கும் செல்வம் பேருந்தில் செல்லும்போது இருதரப்பினரிடையே மோதல். தட்டிக்கேட்ட செல்வம் மீது ஆதிக்கச்சாதியைச் சேர்ந்த மாணவர்கள் கொலை வெறித் தாக்குதல் நடத்தியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என ஆறுமுகம் புகார். செல்வம் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். | வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | |
| 1821. | 15.07.2011 | **திருச்சி மாவட்டம்:** பாலக்கரை பகுதியைச்சேர்ந்த 16 வயது மாணவிக்கும் அவரது உறவினருக்கும் நடக்க இருந்த திருமணத்தை இன்ஸ்பெக்டர் சித்ரா, மற்றும் மாவட்ட சமூகநல அதிகாரி பூங்கொடி தடுத்து நிறுத்தினர். | குழந்தைத் திருமமணம் | தீக்கதிர் |
| 1822. | 15.07.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு மேலகோவில்பட்டி கிராமத்தில் தலித் பிரிவைச் சேர்ந்த கார்த்திகேயம்மாள் மரணமடைந்தார். இறுதி சடங்கில் காளியம்மன் கோவில் வழியாக பிரேதம் செல்ல ஆதிக்கச்சாதியினர் எதிர்ப்பு. இருபிரிவினரிடையே மோதல். தலித் சமூகத்தைச் சேர்ந்த சகாயம், ஆனந்தராஜ், இருவர் காயம். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்